Original Suit No.521/2017 நாள்: 22.07.2024

**வா.சா.1 சுப்ரமணி**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நான் திரு.வி.க சாலை, ஹர்ஷா டவர், கதவு எண்.6 /45 என்ற முகவரியில் இயங்கி வரும் ஆதிசிவன் பைனான்ஸ்ல் நான் பங்குதாரராக இருக்கிறேன் என்றால் சரிதான். அதன் பதிவு நகல் பிவாசாஆ.2. பிவாசாஆ.1 நிறுவனமான ஆதிலெட்சுமி கேப்பிடல் என்ற நிறுவனத்திலும் நான் பங்குதாரராக இருக்கிறேன் என்றால் சரிதான். நானும், வாசா.3 லோகநாதனும் பிவாசாஆ.1 நிறுவனத்தில் பங்குதாரர் என்றால் சரிதான். நானும், வாசா.2 சிவகுமாரும் பிவாசாஆ.2 நிறுவனத்தில் பங்குதாரர் என்றால் சரிதான். நான் இந்நிதி நிறுவனங்கள் இல்லாமல் தனிப்பட்ட முறையிலும் வரவு செலவு செய்து வருகிறேன். அந்த தனிப்பட்ட வரவு செலவுகளை பாண்ட் அடிப்படையில் தான் 10 வருடங்களாக தொழில் செய்து வருகிறேன். எங்கள் நிறுவனத்தில் கடன் பெறும் பட்சத்தில் வட்டியை செலுத்தினால் அதற்கு ரசீது வழங்குவோம். தனிப்பட்ட முறையில் வழங்கும் கடனுக்காக செலுத்தப்படும் வட்டிகளை நான் முழுவதுமாக குறித்து வைப்பதில்லை. பைனான்ஸ் தொழில் தவிற விவசாயம் மற்றும் ரியல் எஸ்டேட் செய்து வருகிறேன். நான் ரியல் எஸ்டேட் தொழிலை மனைகளாக வாங்கி விற்கும் தொழிலும், நில புரோக்கராகவும் இருந்து தொழில் செய்து வருகிறேன். எனக்கு இரண்டு வங்கியில் கணக்கு உள்ளது. எனக்கு தாந்தோணிமலையில் இருக்கும் KVB மற்றும் SBI வங்கிகளில் சேமிப்பு கணக்கு உள்ளது. நான் கடந்த 7, 8 வருடங்களாக வருமான வரி காட்டி வருகிறேன். நான்

வருமான வரி கணக்கில் பிவாசாஆ.1, 2 நிதி நிறுவனங்களில் இருந்த வரும் வருமானம், என்னுடைய தனிப்பட்ட முறையில் நான் கொடுக்கல் வாங்கல் செய்து வரும் வட்டி தொழில் வருமானம் மட்டுமே காட்டி வருகிறேன். ரியல் எஸ்டேட் மற்றும் விவசாயம் வருமானத்தை நான் வருமான வரி கணக்கில் காட்டவில்லை. என் மனைவி அரசு ஆசிரியராக பணி புரிந்து வருகிறார். அவருடைய சம்பளம் வங்கியின் மூலமாக தான் வரும் என்று சொன்னால் சரிதான். 29.05.2015 அன்று ரூ.6,00,000/- கடன் கொடுக்கும் அளவிற்கு என் கை வசம் ரூ.6,00,000/- இருந்தது என்று காட்டுவதற்கு ஆவணங்கள் உண்டு என்று சொன்னால் ஆவணங்களை இல்லை. ஆனால் தென்னை குத்தகை பணமும், ரியல் எஸ்டெட் தொழில் பணமும் கிடைத்தது. எனக்கு 250 தென்னை மரங்களை எனக்கு பாத்தியப்பட்டுள்ளது என்று காட்டுவதற்கு வருவாய் துறை ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை. கடன் கொடுத்த தேதியன்று எந்த சொத்தை விற்ற வகையில் அல்லது எந்த சொத்தை விற்று எனக்கு கிடைத்த புரோக்கர் கமிசன் கிடைத்தது என்று காட்டக்கூடிய சொத்து சம்மந்தப்பட்ட ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை. எனக்கு விவசாய நிலங்கள் இல்லை என்றும், அதில் இருந்து எனக்கு வருமானம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேன். நான் வழக்குரையில் குறிப்பிட்டுள்ளது போன்ற பிரதிவாதி அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை விற்க போவதாக யார் மூலம் தெரிந்து கொண்டேன் என்று கேட்டால் உள்ளூரில் பேசிக் கொண்டார்கள் குறிப்பிட்டு யார் என்று எனக்கு தெரியாது. நான் வழக்கில் சொல்லியது போன்றும், சாட்சியத்தில் சொல்லியது போன்றும் 29.05.2015 அன்று ரூ.6,00,000/- நான்

கடனாக கொடுக்க வில்லை என்றும் அந்த கடனுக்கு மறுபயனாக பிரதிவாதி கடனுறுதி சீட்டு எழுதிக் கொடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் பங்குதாரராக உள்ள ஆதிலெட்சுமி கேப்பிடல்ஸ்ல் 29.05.2015 அன்று பிரதிவாதி ரூ.6,00,000/- கடனாக பெற்றார் என்றும், அதற்கு நான் தான் பிரதிவாதிக்காக பரிந்துரை செய்தேன் என்றால் சரியல்ல. அவ்வாறு கடன் வாங்கும்போது லோகநாதன் ஆதிலெட்சுமி கேப்பிடல்ஸ்ல் என்று பெயர் பொறிக்கப்படாத வெற்று கடனுறுதி சீட்டில் லோகநாதன் பிரதிவாதியிடம்இருந்து கையொப்பம் மட்டும பெற்றுக் கொண்டார் எ ன்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி இது குறித்து லோகநாதன் கேட்ட போது லோகநாதன் இது வழக்கமான நடைமுறைதான் என்று கூறியதாகவும் பிரதிவாதி தன்னுடைய அவசர தேவைக்காக வெற்று புரோநோட்டில் கையொப்பம் செய்து கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல. 17.04.2017 அன்று பிரதிவாதியை ஆதிலெட்சுமி கேப்பிடல்ஸ்ல்க்கு வரவழைத்து வட்டி தொகையான ரூ.1,40,000/-ஐ செலுத்த கோரினோம் என்றும் அவர் செலுத்த தவறியதால் அந்த வட்டி தொகை ரூ.1,40,000/-க்கு வாசகங்கள் நிரப்பபடாத வெற்று புரோநோட்டில் கையொப்பம் மட்டும் வாங்கி வைத்துக்கொண்டோம் என்று சொன்னால் சரியல்ல. 17.07.2017 அன்று பிரதிவாதியை ஆதிலெட்சுமி கேப்பிடல்ஸ்ல்க்கு வரவழைத்து வட்டி தொகை செலுத்த கோரினோம் என்றும் அவர் செலுத்த தவறியதால் அந்த வட்டி தொகைக்காக வாசகங்கள் நிரப்பபடாத வெற்று புரோநோட்டில் கையொப்பம் மட்டும் வாங்கி வைத்துக் கொண்டோம் என்று சொன்னால் சரியல்ல. அதன்படி வாசகங்கள் நிரப்படாத 3 வெற்று புரோநோட்டுகள் பிரதிவாதியின் கையொப்பம் மட்டும் உள்ளதை ஆதிலெட்சுமி கேப்பிட்டல்ஸ்க்காக பெற்று வைத்துள்ளோம்

என்று சொன்னால் சரியல்ல. 3 வது முறையாக புரோநோட்டிற்காக கையொப்பம் பெறும் போது ஆதிலெட்சுமி கேப்பிட்டல்ஸ வரவு செலவு கணக்கில் முரண்பாடு இருந்ததால் பிரதிவாதி அந்த பங்குதாரரிடம் கேட்ட போது பங்குதாரர்களுக்கும் பிரதிவாதிக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. கருத்து வேறுபாடு ஏற்பட்ட காரணத்தினாலும் அபராத வட்டி கேட்டதாலும் காவல் துறையில் பிரதிவாதி எங்கள் மீது புகார் கொடுக்க சென்றார் என்றால் சரியல்ல. அதனால் பிரதிவாதி காவல் துறை நடவடிக்கை எடுத்துவிடுவார் என்ற காரணத்திற்காக என்னுடைய தனிப்பட்ட முறையில் கடன் பெற்றதாக நிதிநிறுவனத்தில் இருந்த 3 கடனுறுதி சீட்டில் இருந்து கையொப்பத்தை பார்த்து அதே போன்று கையொப்பம் செய்து பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு எதுவும் அனுப்பாமல் இந்த வழக்கை அவசர கதியாக தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. அந்த 3 புரோநோட்டிலும் 1 ஐ பயன்படுத்தும் பட்சத்தில் பிரதிவாதி அந்த வெற்று புரோநோட்டுகளை பிற்காலத்தில் கேட்க கூடும் என்ற காரண்த்தினால் மோசடியாக தயார் செய்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. வாசாஆ..1ன் அடிப்படையில் பிரதிவாதி எந்த காலத்திலும் என்னிடம் கடன் பெற்றதில்லை என்று சொன்னால் சரியல்ல. வாசாஆ.1 அடிப்படையில் எனக்கும் பிரதிவாதி்க்கும் கடன் கொடுத்தவர் வாங்கியவர் என்ற உறவு இல்லை என்றும், வாசாஆ.1ல் உள்ள கையொப்பம் பிரதிவாதி உடைய கையொப்பம் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. வாசா.2, 3 சாட்சிகள் என்னுடன் பைனான்ஸ் தொழிலில் பங்குதாரர்கள்என்பதால் எழுதியதும் என்றும், சாட்சி என்றும் வாசாஆ 1ல் கையொப்பம் செய்து என்னுடன் சேர்ந்து பொய்யாக சாட்சியம்

அளித்துள்ளார்கள் என்றால் சரியல்ல. என்னுடைய பிரதிவாதியின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு
படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்
கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒ/ம். சண்முகவேல்ராஜ்,
முதன்மை சார்பு நீதிபதி,
கரூர்.